# சேக்கிழாரின் பழமை போற்றும் பாங்கு

**மு.கயல்விழி**
*உதவிப் பேராசிரியர், தமிழ்த் துறை*
*பச்சையப்பன் மகளிர் கல்லூரி, காஞ்சிபுரம்*

**முனைவர் மு.நஜ்மா**
*தமிழ்த் துறைத் தலைவர்*
*பச்சையப்பன் மகளிர் கல்லூரி, காஞ்சிபுரம்*

## முன்னுரை

ஒரு இலக்கியவாதியின் படைப்பு காலத்தை வென்று நின்றால் அவை அமர இலக்கியம் என்றழைக்கப்படும். இவ்வகையான இலக்கியங்கள் சில சிறப்பியல்புகளைக் கொண்டிருத்தல் வேண்டும். ஆழ்ந்த கருத்து, அழகிய நடை, ஒப்பற்ற இலக்கியத்திறன், கட்டுக்கோப்பான கட்டமைப்பு போன்றவையே அச்சிறப்பியல்புகளாகும். அவ்வாறான இலக்கியங்கள் பல தமிழில் தோன்றிக் காலத்தை வென்று நின்றன. அவற்றில் முதன்மையானது சேக்கிழார் பெருமான் இயற்றிய திருத்தொண்டர் புராணம் என்ற பெரிய புராணமாகும். இந்நூல் 12 ஆம் திருமுறையாக வைத்துப் போற்றப்பெறும் சிறப்பு வாய்ந்தது. சேக்கிழார் பரந்த சோழப் பேரரசின் முதலமைச்சர் என்ற உயரிய பதவியை வகித்தவர். எனவே அப்பதவிக்குரிய குணநலன்களைக் கொண்டவராகத் திகழ்ந்தார். அன்னார் அரசு பணியுடன் இலக்கியப் பணியும் ஒருங்கே புரிந்த பண்பாளராவார். அந்நூலின் மூலம் அவரின் பரந்த அறிவையும், விரிந்த ஆற்றலையும், நுண்மாண் நுழைபுலத்தையும், ஆழ்ந்த கல்வி அறிவையும், சிறந்த புலமைத் திறத்தையும் அறிய முடிகின்றது. தனக்கு முன் தமிழில் தோன்றிய செவ்விலக்கியங்கள் யாவற்றையும் ஆழ்ந்து கற்றுத் தேர்ந்தவராக அன்னார் திகழ்ந்தார். அதற்கான சான்றுகள் அவரது நூலில் பலவிடங்களில் காணமுடிகின்றது. இவற்றால் முன்னோர் கருத்தைப் பொன்னே போல் போற்றும் அவரின் பாங்கு உணரர்பாலது. முதலமைச்சர் என்ற நிலையில் அனைத்து நூல்களையும் எளிதில் கைவரப்பெற்று அவற்றை ஆழ்ந்து கற்றுத்தோயும் வாய்ப்பு அவருக்குக் கிடைத்திருத்தல் வேண்டும். தான் கற்றறிந்து இன்புற்ற முன்னோர்களின் நூல்களில் உள்ள அரிய கருத்துகளை நேரடியாகவோ, மறைமுகமாகவோ தன் நூலில் தடையின்றிக் கையாண்டு வெற்றியடைந்துள்ளார்கள்.

சேக்கிழார் குறித்தும் அவர்தம் படைப்பான பெரிய புராணம் குறித்தும் ஆய்வுகளும், விமர்சனங்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவற்றில் பெரும்பான்மையானவை அவரது இலக்கியம் குறித்தும், அவர்தம் இலக்கியத் திறன் குறித்தும் புகழ்ந்தே வெளிவந்துள்ளன. இதுவரை இயற்றப்பட்ட நூல்கள் யாவும் அவருடைய நூலான பெரிய புராணத்தின் சிறப்பு பற்றி பொதுவாக விளக்குவதாக அமைந்துள்ளன. ஆனால் அவர் பழமை போற்றும் பற்றாளர் என்பதும், பழந்தமிழ் இலக்கியங்களைப் போற்றித் தம் நூலில் அவற்றைக் கையாண்டு தன் படைப்பைச் சிறக்கச் செய்தமை குறித்து இதுவரை ஆய்வேதும் மேற்கொள்ளப்படவில்லை. எனவே இது குறித்த ஆய்வு இக்கட்டுரையில் மேற்கொள்ளப்படுகின்றது.

## தொல்காப்பியம்

சேக்கிழார் பெருமான் தமிழில் கிடைக்கப் பெற்ற முதல் தமிழ் இலக்கண நூலான தொல்காப்பியத்தை நன்கு பயின்றவர் என்பதற்குப் பல சான்றுகள் உள. தொல்காப்பியத்தின் உவமையியலின் 11 ஆம் சூத்திரத்தில் வரும் ‘‘பல்குறிப்பினவே’’ என்ற மிகையை விளக்க வந்த இளம்பூரணர் ‘‘அத்து’’ என்பது உவம உருபாக வரும் என்று கூறி அமைவார். இதற்குச் சான்றாகக் கலித்தொகையில் உள்ள,

> ‘‘துணை மலர் எழில் நீலத்து ஏந்துஎழில் மலர் உன்கண்’’
>
> என்ற அடியில் வரும் ‘‘அத்து’’ என்பது,‘‘போல’’ என்ற பொருளில் உவம உருபாக வந்ததைச் சுட்டிக்காட்டுவார். இவற்றைச் சேக்கிழார் பெருமான் தன் திருமலை சிறப்பில்,
>
> ‘‘செய்யக் கோல் அபயன் திருமனத்து ஓங்கும்
> திருக் கயிலாய நீள் சிலம்பு’’
> (திருமலைச் சிறப்பு:12)

என்று கூறி அத்து என்பதை உவம உருபாக அமைத்துள்ளார். மேலும் முல்லை நிலம் குறித்துக் கூறும் அகத்திணை சூத்திரத்தில் உள்ள,

> ‘‘மாயோன் மேயக் காடுறை உலகம்’’
> (அகத்திணையியல்:5)

என்ற செய்யுளைத் தன் திருக்குறிப்பு தொண்டர் புராணத்தில் முல்லைத் திணைப் பற்றிக் கூறும் நிலையில்,

"அங்கண் முல்லையின் தெய்வம் என்று
அருந்தமிழ் உரைக்கும்
செங்கண் மால் தொழும் சிவன் மகிழ் திரு
முல்லை வாயில்"

(திருக்குறிப்புத் தொண்டர் புராணம்:18)

என்று கூறியிருப்பதை ஒப்பிட்டுப்பார்க்கலாம்.

**இறையனார் களவியல் உரை**

தமிழரின் காதல் வாழ்க்கையைப் பற்றிக் கூறும் இவ்விலக்கண நூலைச் சேக்கிழார் ஆழ்ந்து கற்றுத் தன் நூலில் இதன் கருத்துகளைக் கையாண்டுள்ளார். ஒத்தப் பண்புடையோர் அன்பு நலன் குறித்துக் களவியல் உரையில்

"இவனும் பதினாறாட்டைப் பிராயத்தனாய்
இவளும் பன்னீராட்டைப் பிராயத்தளாய் ஒத்தப்
பண்பும் ஒத்தச் நலனும் ஒத்தக் அன்பும் ஒத்த
செல்வமும் ஒத்த கல்வியும் உடையவர்"

(களவியல் உரை.சூ:1)

என்று கூறு செல்கின்றது. இதை,

"பலவுடன் பேசிஇ ஒத்த பண்பின் ஆல் அன்பு
நேர்ந்தான்"

(தடுத்தாட்கொண்ட புராணம்:8)

என்று சேக்கிழார் கூறுவார். மேலும்,

"வேட்கைஎன்பது என்னோவெனில் ஒருவரை ஒருவர் இன்றியமையாமை அவ்வின்றியமையாது நின்ற வேட்கை எல்லாம் உணர்வினையும் நீக்கித் தானேயாய் நாண்வழிக் காசு போலவும் நீர்வழி மிதவை போலவும் பான்மை வழிக்கூடி இருவர் உயிரையும் புணர்விக்கும்... நாணம் முதலிய நான்கும் புனல் ஓடு வழியிற் புல் சாய்ந்தார் போல வேட்கையால் மீதூரப்பட்டுச் சாய்ந்து கிடப்பன" (களவியல் உரை.சூ:2)

என்று கூறுகின்றது. இதனை எடுத்தாண்ட சேக்கிழார் சுந்தரரை முதன் முதலாய்க் கண்ட பரவையாருக்கு,

"மனதில் அடக்க முடியாத, இதற்கு முன்
அனுபவித்திராத ஒரு வேட்கை தான்
கைகொண்டு
ஒழுகிய நாணம், மடம், அச்சம், பயிற்பு போன்ற
பெண்மை குணங்கள் நான்கினையும்
அடக்கி மேலே எழுந்தது"

(தடுத்தாட்கொண்ட புராணம்:143)

என்று கூறிச்செல்வதை ஒப்புநோக்கலாம்

**சங்க இலக்கியங்கள்**

சேக்கிழார் சங்க இலக்கியங்களான எட்டுத்தொகை மற்றும் பத்துப்பாட்டு நூல்களை ஆழ்ந்து கற்றவர். அவற்றின் கருத்துகளைத் தன் நூலின் பல இடத்தில் தயங்காது பயன்படுத்தியுள்ளார். ஒரு நாட்டின் அரசன் தன் நாட்டு மக்களுக்கு உயிர் போன்றவன் என்ற புறநானூற்று செய்யுளான,

"நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே
மன்னன் உயிர்த்தே மலர்தலை யுலகம்"

(புறநானூறு:186)

என்ற பாடலின் கருத்தைச் சேக்கிழார் தன் திருநகரச் சிறப்பில் அரசன் தன் நாட்டு உயிர்கட்கு கண்ணும் உயிரும் போன்றவன் (திருநகரச் சிறப்பு:14) என்றும் அவன் தன் நாட்டு உயிர்களுக்கு உயிர் போன்றவன் (புகழ் சோழனார் புராணம்:33) என்றும் கூறியிருப்பதை ஒப்பு நோக்கலாம். மேலும் புறநானூற்றில் வரும்,

"கந்து முனிந்து உயிர்க்கும் யானையொடு"

(புறநானூறு:178)

என்ற தொடருடன் சேக்கிழாரின் சம்பந்தர் புராணத்தில் வரும்,

"கந்து சீறும் மால் யானை மீனவன் கருத்து
நேர்" (சம்பந்தர் புராணம்:773)

என்ற தொடருடன் ஒத்து வருகின்றது. அகநானூற்றில் வரும்,

"புலிப்பல் கொத்தப் புலம்புமணித் தாலி"

(அகநானூறு:7)

என்ற தொடரைச் சேக்கிழார் கண்ணப்பர் புராணத்தில்,

"இரும்பொலி உயிற்றுத் தாலி"

என்று கையாண்டுள்ளார். மேலும் இதே நூலில் வரும்,

'வண்டுபோ தவழ்க்குந் தண்டகமழ் புறவு"

அகநானூறு:74)

என்ற செய்யுள் தொடரைச் சேக்கிழாரின் முருக நாயனார் புராணத்தில்,

"வண்டு பாடப் புனல் தடத்து மலர்ந்து கண்ணீர்
அரும்புவன"

என்று கூறியிருத்தல் ஒத்திருக்கின்றது. முயல் வேட்டைக்குச் செல்லும் வேட்டை நாயின் இயல்பைக் கூறும் நற்றிணைப் பாடல் வரிகளான,

"முயலவேட் டெழுந்த முடுகுவிசைக் கதநாய்
நன்னாப் புரையும் சீறடி"

(நற்றிணை:252)

என்பதைக் கண்ணப்பருடன் சென்ற வேட்டை நாய்கள் தம் நாக்குகளை நீட்டியும் சுருக்கியும் ஓடிய காட்சி வேடர் மகளின் சிவந்த பாதம் போல் அமைந்திருந்தது என்று கூறிய கருத்துடன் ஒத்து வருகின்றது (கண்ணப்ப நாயனார் புராணம்:69).

பரத்தையிடம் சென்று போகம் துய்த்து மனம் திருந்தி வந்த தன் தலைவனை வெறுத்து ஒதுக்கித் தலைவியின் கூற்றான,

“எம் நலம் தொலைவது ஆயினும்
துன்னலம்-பெரும பிறர் தோய்ந்த மார்பே”

(ஐங்குநுறுறு:63)

என்ற ஐங்குறுநூற்றின் செய்யுள் திருநீலகண்ட நாயனார் பரத்தையிடம் சென்று மீண்ட போது அவரது மனைவியர் அவரை வெறுத்து “என் அழகும் இளமையும் வீணானாலும் என்னைத் தீண்டலாகாது” என்று உரைப்பதாகச் சேக்கிழார் உரைப்பதுடன் பொருந்தி வருகின்றது (திருநீலகண்ட நாயனார் புராணம்:56). பெண்களின் கற்பின் பெருமையை எடுத்தோதும் கலித் தொகையின்,

“வறன் ஓடின் வையகத்து வான்தரு கற்பினாள்”

(கலித்தொகை:16)

“அருமழை தரல் வேண்டின் தருகிற்கும்
பெருமையளே” (கலித்தொகை:39)

போன்ற பாடல்கள் மானக்கஞ்சாறர் புராணத்தில் வரும்,

“மழைக்கு உதவும் பெரும் கற்பின் மனை
கிழத்தியார் தம்பால்”

(மானக்கஞ்சாற நாயனார் புராணம்:11)

என்ற தொடருடனும் காமநோயால் வருந்தும் மெல்லியலார் இயல்பினைக் கூறும்,

“பொறை என் வரைத்து அன்றிப் பூநுதல் ஈந்த
நிறை அழி காமநோய் நீந்தி அறை உற்ற”
(கலித்தொகை:138)

என்ற அடிகளும் தடுத்தாட்கொண்ட புராணத்தில் காமநோயால் வருந்திய பரவையார் கூற்றான,

“புலரும் படி யன்று இரவு என்ன அளவும்
பொறையும் நிறையும் இறையும் தரியா”

(தடுத்தாட்கொண்ட புராணம்:176)

என்ற தொடருடன் இயைந்து வருகின்றன. சோழநாட்டு காவிரியின் சிறப்பைக் கூறிப் போந்த கடியலூர் உருத்திரங்கண்ணனாரின் பட்டினப்பாலை அடிகளான,

“வான் பொய்ப்பினும் தான்பொய்யா
மலைத்தலைய கடற்காவிரி”

(பட்டினப்பாலை:5-6)

என்பதுடன் சண்டேசர் புராணத்தில் காவிரியாற்றின் சிறப்பினைக் கூறும் சேக்கிழாரின்,

“பூந்தண் பொன்னி எந்நாளும் பொய்யாது
அளிக்கும் புனல் நாட்டு”

(சண்டேசர் புராணம்:1)

என்பது ஒத்துச்செல்கின்றது. மதுரைக்காஞ்சியில் வரும் நகரச் சிறப்பைக் கூறும்,

“முழவிமிழும் அகலாங்கண்
விழவுநின்ற லியன்மறுகில்”

(மதுரைக் காஞ்சி:327-328)

என்ற வரிகள் மணக்கஞ்சாரார் புராணத்தில் கஞ்சாறு என்ற நகரின் சிறப்பைக் கூறும்,

“புனை சாயல் மயில் அனையார் நடம் புரியப்
புகல் முழவம்
கனை சாறு மிடை வீதி கஞ்சாறு
விளங்கியதால்புகல்”

(மானக்கஞ்சாறர் புராணம்:6)

என்ற தொடருடன் இயைந்து வருகின்றது.

**திருக்குறள்**

சேக்கிழார் பெருமான் திருக்குறளை ஆழ்ந்து கற்றவர் என்பதுடன் அவற்றைப் பெரிய புராணத்துள் பலவிடங்களில் கையாண்டுள்ளார். இளங் காதலர் இன்பம் துய்க்கும் இன்ப நிலையை உணர்த்தும்,

“கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியும் ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே யுள”

(குறள்:1101)

என்ற குறள் திருநாவுக்கரசர் சங்கிலியாருடன் மணம் புரிந்து இன்பம் துய்ந்த நிலையுடன் ஒப்பிட்டு,

“கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்று
அமர்ந்து இருந்தார் காதலினால்”

(ஏயற்கோன் நாயனார்:267)

என்று கூறியிருத்தல் நோக்கத்தக்கது.

“செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்” (குறள்:26)

என்ற குறளைப் பெரிய புராணத்தில் இயற்பகை நாயனார் புராணத்தில் வரும்,

“செய்வதற்கு அரிய செய்கை செய்த நல்
தொண்டர் போக”

(இயற்பகை நாயனார் புராணம்:28)

என்ற அடிகளுடன் ஒப்புநோக்கலாம். மழையின் சிறப்பைக் குறிக்கும்,

“விசும்பிற் றுளிவீழின் அல்லாமற் றாங்கே
பசும்புற் றலைகாண் பரிது”

(குறள்:16)

என்ற குறளுடன் சண்டேசுரர் புராணத்தில் வரும்,

“ஆனே நெருங்கும் பேர் ஆயம் அளிப்பார் ஆகிப்
பைங் கூழ்க்கு
வானே என்ன நிரை காக்க வந்தார் தெய்வ
மறைச் சிறுவர்”

(சண்டேசுரர் புராணம்:24)

என்ற பாடல் ஒத்திருக்கின்றது. அரசர்களின் இயல்பினைக் கூறவந்த வள்ளுவரின் கூற்றான,

"படைகுடி கூழ்அமைச்சு நட்பரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு"

(குறள்:381)

என்ற குறளுடன்,

"தாழும் செயல்இன்று ஒரு மன்னவன் தாங்க வேண்டும்
கூழும் குடியும் முதல் ஆயின கொள்கைத்தேனும்
சூழும் படை மன்னவன் தோள் இணைக் காவல் இன்றி
வாழும் தகைத்து அன்று இந்த வையகம்" என்று சொன்னார்"

(மூர்த்தியார் புராணம்:28)

என்ற மூர்த்தியார் புராணத்தின் பாடலுடன் ஒத்தமைகின்றது. கற்றறிந்தார் இயல்பை விளக்கும் வள்ளுவரின்,

"தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்" (குறள்:399)

என்ற குறளின் வரியுடன் நாவுக்கரசர் புராணத்தில் வரும்,

"சோறு நாளும் தொண்டர் மகிழ்ந்து உண்ண உண்ணத் தொலையாதே
ஏறு பெருமை புவி போற்ற இன்புற்று இருக்கும் அந் நாளில்"

(நாவுக்கரசர் புராணம்:261)

என்ற பாடல் ஒத்துப்போகின்றது.

**சிலப்பதிகாரம்**

இளங்கோவடிகள் இயற்றிய சிலப்பதிகாரத்தைச் சேக்கிழார் நன்கு பயின்று அவற்றின் இசைநுட்பங்களை எல்லாம் தன் நூலில் எடுத்தாண்டுள்ளார். மேலும் சிலம்பில் கூறப்படும் வரலாற்று செய்திகளையும் தவறாமல் தன் நூலில் கையாண்டுள்ளார்கள். சிலப்பதிகாரக் காட்சிக் காதையில் செங்குட்டுவனை காணவந்த வேட்டுவக் குடிகள் குறிஞ்சி நிலப் பொருட்களைக் காணிக்கையாக அளித்த செய்தியைப் பெரிய புராணத்தில் கண்ணப்ப நாயனார் புராணத்தில் கண்ணப்பரது கண்ணி வேட்டை விழாவிற்கு வந்த வேட்டுவச் சிற்றரசர்கள் காணிக்கை தந்த செய்தியுடன் ஒத்தமைகின்றது (கண்ணப்பர் புராணம்:30). சிலப்பதிகாரத்தில் இந்திர விழவு எடுத்த காதையில் சோழப் பெருவேந்தன் கரிகாலன் இமயம் வரை சென்று புலிக்கொடியைப் பொறித்து வந்த செய்தியைச் சேக்கிழார் தன் திருக்குறிப்பு தொண்டர் புராணத்தில் எடுத்தாண்டுள்ளார்கள் (திருக்குறிப்பு தொண்டர் புராணம்:85)

**மணிமேகலை**

இரட்டைக் காப்பியத்தில் ஒன்றான மணிமேகலையில் பயின்று வரும் பல்வேறு செய்திகள் பெரிய புராணத்தில் எடுத்தாளப் பட்டுள்ளது. மணி மேகலையில் வரும்,

"அமர முனிவன் கெத்தியன் தனது
கரகம் கவிழ்ந்த காவிரி பாவை"

(கடவுள் வாழ்த்து:11-12)

என்ற காவிரி பற்றிய செய்தியை நாட்டுச் சிறப்பில் அகத்திய முனிவரின் கமண்டலத்திலிருந்தே காவிரி நீர் பெருக்கெடுத்தோடியது என்று உரைக்கும் சேக்கிழார் கூற்றுடன் ஒத்துப்போகின்றது. மணிமேகலையில் வரும்,

"இலவு இதழ் செவ் வாய் காணாயோ நீ"
(உதயகுமரனைக் காஞ்சனன் வாளால் எறிந்த காதை:51)

என்பதும் தடுத்தாட்கொண்ட புராணத்தில் வரும்,

"இலவ இதழ் செம் துவர் வாய் நெகிழ்ந்து ஆற்றாமையின் வறிதே"

(தடுத்தாட்கொண்ட புராணம்:174)

என்பதும் ஒத்து வருகின்றன. மணிமேகலையில் துயிலெழுப்பிய காதையில் வரும்,

"அமளி துஞ்சும் ஐம்படைத் தாலி
குதலை செவ் வாய் குறு நடைப் புதல்வர்க்குக்"
(துயில் எழுப்பிய காதை:56-57)

என்பது தடுத்தாட்கொண்ட புராணத்தில் வரும்,

"ஐம் படை சதங்கை சாத்திஇ அணிமணிச் சுட்டி சாத்தி"

(தடுத்தாட்கொண்ட புராணம்:4)

என்ற பாடல் வரியுடன் பொருந்தி வருகின்றது. மணிமேகலையில் வரும்,

"செங்கயல் நெடுங்கண் செவிமருங் கோடி"

(பளிக்கறை புக்க காதை:101)

என்ற வரிகளில் பெரிய புராணத்தில்,

"மங்கையர் வதனச் சீத மதிஇரு மருங்கும் ஓடிச்
செங் கயல் குழைகள் நாடும் திருமுனைப்பாடி நாடு"

(தடுத்தாட்கொண்ட புராணம்:1)

என்று பயின்று வருகின்றது. மேலும்,

"உருவு நுகர்ச்சி குறிப்பே பாவனை
உள்ள அறிவு இவை ஐங்கந்தம் ஆவன"
(பவத்திறம் அறுகெனப் பாவை நோற்ற காதை:189-190)

என்ற அடிகள் சம்பந்தர் புராணத்தில் வரும்,

"நின்ற உரு வேதனையே குறிப்பு செய்
நேர் நின்ற ஞானம் என நிகழ்ந்த ஐந்தும்
ஒன்றிய கந்தத்து விவேஅமுத"

(சம்பந்தர் புராணம்:916)

என்ற பாடலுடன் ஒத்தமைகின்றது.

**சீவக சிந்தாமணி**

சேக்கிழார் ஐம்பெருங்காப்பியத்தில் சமண இலக்கியமான சீவக சிந்தாமணியை ஆழ்ந்து கற்றவர் என்பதுடன் அக்கருத்துகளைத் தன் நூலின் பலவிடங்களில் பயன்படுத்தியுள்ளார். சான்றாக,

"கட்டழற் கதிரை ஊர்கோள்
வளைத்தவா வளைத்துக் கொண்டார்"

சீவக சிந்தாமணி:1136)

என்ற சிந்தாமணி வரிகள் திருக்குறிப்பு தொண்டர் புராணத்தில் வயலின் சிறப்பைக் கூறப்புகுந்த சேக்கிழார் "பசிய வயல்களிடையே உள்ள தாமரை மலர்கள் மேல் சங்குகள் இருக்கும் தோற்றம் ஊர் கோலால் சூழப்பட்ட மதியின் தோற்றத்தை ஒத்திருந்தது"என்று கூறுவதை ஒப்பிட்டுப் பார்க்கலாம் (திருக்குறிப்பு தொண்டர் புராணம்:26). உடும்பைப் போன்று பற்றியிருத்தலைப் பற்றி சிந்தாமணியின் அடிகளான,

"தணக்கிறப் பறித்த போதும் தானளை வடுத்தல் செல்லா
நிணப்புடை உடும்பன் னாரை"

(சீவக சிந்தாமணி:2887)

என்பவற்றுடன் கண்ணப்ப நாயனார் புராணத்தில் கண்ணப்பர் சிவனை விட்டு நீங்காத நிலைக்கு உடும்பை உவமை காட்டி,

"வங்கினைப் பற்றிப் போதா வல் உடும்பு என்ன நீங்கான்"

(கண்ணப்ப நாயனார் புராணம்:116)

என்று கூறுவதை எண்ணிப்பார்க்கலாம். சிந்தாமணியில் வரும்,

"சொல் அரும் சூல் பசும் பாம்பின் தோற்றம் போல்
மெல்லவே கரு இருந்து ஈன்று மேல் அலார்"

(சீவக சிந்தாமணி:53)

என்ற பாடல் சேக்கிழாரின் நாட்டுச்சிறப்பில் கூறும்,

"சூல் முதிர் பசலை கொண்டு சுருள் விரித்து அரனுக்கு அன்பர்
ஆல் இனச் சிந்தை போல அலர்ந்தன கதிர்கள் எல்லாம்"

(நாட்டுச் சிறப்பு:21)

என்ற பாடலுடன் ஒத்து காணப்படுகின்றது. யாழின் இசையைச் சிறப்பிக்கப் புகுந்த திருத்தக்க தேவரின் கூற்றான,

"விருங்கடற் பவளச் செவ்வாய் திறந்திவள் பாடி னாளோ
நரம்பொடு வீணை நாவி னடந்ததோ வென்று நைந்தார்"

(சீவக சிந்தாமணி:658)

என்பது பெரிய புராணத்தில் வரும் சம்பந்தர் புராணத்தில் வரும்,

"யாழில் எழும் ஓசையுடன் இருவர் மிடற்று இசை ஒன்றி"

(சம்பந்தர் புராணம்:136)

என்பதை நினைவுபடுத்துகின்றது.

**முடிவுரை**

சேக்கிழார் சான்றோர்கள் நிறைந்த தொண்டை நாட்டைச் சார்ந்தவர். எனவே இயல்பாகவே அவர் அறிவிற் சிறந்தோராக விளங்கினார். பரந்த சோழப் பேரரசின் முதலமைச்சர் என்ற உயரிய பதவியை அலங்கரித்ததால் அக்காலத்தில் அனைவரையும் விட அவர் அறிவில் மேம்பட்டவராகத் திகழ்ந்தார். இத்தகு சிக்கலான பதவியிலிருந்து கொண்டே இவ்வகையான சிறந்த இலக்கியத்தைத் தமிழுலகிற்கு படைத்தளித்த அவரது திறன் போற்றுதற்குரியது. அவரைப் போன்று அரசியல் பணியும், இலக்கியப் பணியும் ஒருங்கே புரிந்தது வெற்றி பெற்றவர்கள் மிகவும் அபூர்வம். அவரின் சிறப்புக்குத் தம் முன்னோர் படைத்த நூல்களைப் பொன்னே போன்று போற்றியது முக்கியக் கரணமாகும். பழமையைப் போற்றும் அவரது நற்குணம் அவரது நூலின் பலவிடங்களில் வெளிப்பட்டு நிற்கின்றது. தீவிர சைவராகச் சேக்கிழார் இருந்த போதிலும் சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி போன்ற புறச்சமய நூல்களைத் தயக்கமின்றி எடுத்தாண்டது அவரின் சமயப்பொறை எடுத்துக்காட்டும். இவற்றால் தமிழில் தோன்றிய தலைச் சிறந்த இலக்கியங்களில் முதன்மையானது பெரிய புராணம் என்ற பெயரைப் பெறுகின்றது. சேக்கிழார் பெருமான் நன்கு கற்ற புலமையாளர் என்பதுடன், பழமையைப் போற்றும் பண்பாளராயும் திகழ்ந்தார் என்பது நன்கு அறியலாகின்றது. தான் படித்து அனுபவித்த இலக்கியங்களில் சிறந்தவற்றைத் தன் நூலில் தேவையான இடத்தில், தேவையான அளவு பயன்படுத்தியுள்ளமை அவரது மதியூகத்தை உணர்த்தும். பலநூல்களைக் கற்ற அவரின் பன்முக அறிவு அவரின் நூல்முழுவதும் விரவிக்கிடக்கின்றது. சேக்கிழார் பெருமானின் நூல் இன்றுவரை சிறந்து விளங்குவதற்குப் பல்வேறு காரணங்கள் கூறப்பட்டாலும் அவர் பழமையைப் போற்றிய திறனும் அவற்றைப் பாங்குடன் தன் படைப்பில் பதியச் செய்து விட்டுச் சென்ற சிறப்பும் ஒரு முக்கியக் காரணமென்றால் அது மிகையாகாது.

**பார்வை நூற்பட்டியல்:**

1. பெரிய புராணம்,(1970), ஸ்ரீ வைகுண்டம்: திருப்பனந்தாள் காசி மட வெளியீடு
2. பரிமணம்.அ.மா.&பாலசுப்பிரமணியன்.கு.வெ.(பதி), (2007),அகநானூறு,சென்னை: நியூ சென்சூரி புக் ஹவுஸ் லிமிடெட்

3. பரிமணம்.அ.மா.& பாலசுப்பிரமணியன்.கு.வெ. (பதி).(2007),புறநானூறு சென்னை: நியூ சென்சூரி புக் ஹவுஸ் லிமிடெட்
4. பரிமணம். அ.மா. & பாலசுப்பிரமணியன்.கு.வெ. (பதி).(2007),நற்றிணை சென்னை: நியூ சென்சூரி புக் ஹவுஸ் லிமிடெட்
5. பரிமணம்.அ.மா.& பாலசுப்பிரமணியன்.கு.வெ.(பதி). (2007),ஐங்குநூறு சென்னை: நியூ சென்சூரி புக் ஹவுஸ் லிமிடெட்
6. பரிமணம்.அ.மா. &பாலசுப்பிரமணியன்.கு.வெ.(பதி). (2007),பட்டினப்பாலை, சென்னை: நியூ சென்சூரி புக் ஹவுஸ் லிமிடெட்
7. பரிமணம்.அ.மா. & பாலசுப்பிரமணியன்.கு.வெ. (பதி). (2007),மதுரைக் காஞ்சி, சென்னை: நியூ சென்சூரி புக் ஹவுஸ் லிமிடெட்
8. பரிமணம்.அ.மா. &பாலசுப்பிரமணியன்.கு.வெ. (பதி).(2007),கலித்தொகை, சென்னை: நியூ சென்சூரி புக் ஹவுஸ் லிமிடெட்
9. சிலப்பதிகாரம்,(2010), சென்னை: கிழக்குப் பதிப்பகம்
10. மணிமேகலை,(1969),சென்னை: திருநெல்வேலி சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்
11. தொல்காப்பியம்,(2015), சென்னை: கௌரா பதிப்பகம்
12. இறையனார் அகப்பொருள் உரை,(2010), சென்னை: சாரதா பதிப்பகம்
13. சீவக சிந்தாமணி,(2010), சென்னை: கிழக்கு பதிப்பகம்